12 மார்ச் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH

தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு(உள்ளடக்கியது) பங்கெடுப்பு,(படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்: **குடும்பமும் இறைவேண்டலும்**

நிகழ்வின் நோக்கம்: **உலக இறைவேண்டல் நாள் - தவக்காலம்**

# உயிருள்ள தண்ணீர்

அவளுக்கு ஒரு வரலாறு உண்டு. செய்துமுடித்தவை, செய்யாமல் விடுபட்டவை, சில நல்லவை, சில நல்லன அல்லாதவை, குற்றங்கள், துயரங்கள், வருத்தங்கள், இரகசியங்கள் அனைத்தும் உண்டு. வண்ணமயமான கடந்த காலத்தைக் கொண்ட பெண்.



அவசரப்பட்டு தீர்ப்பளிக்க வேண்டாம். கடந்த கால விவரங்களைப் பற்றி நமக்குத் தெரியாது. ஒருவேளை நமக்கு அவை தேவையும் இல்லை. நாமும் கடந்தகால வரலாற்றைக் கொண்ட மக்கள் தான். நாமும் கூட அந்த சமாரியப்பெண்ணைப் போலத்தான்.

அந்தப் பெண்ணைபோல நமக்கும் கடந்த காலம் உண்டு. அதைக் கண்டுபிடித்து விடுவார்களோ என்ற அச்சத்தில் நாம் வாழ்கிறோம். நம்மைப் பற்றிய உண்மையை அவர்கள் கண்டுபிடித்துவிடுவார்களோ என்ற பயம் மட்டுமல்ல; நம்முடைய அந்தரங்க நிலையை அறிந்தும் நாம் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்றும் விரும்புகிறோம். அதுபோன்று ஒரு கடந்தகாலத்தைக் கொண்ட சமாரியப்பெண்ணிடம் தான் “எனக்குக் குடிக்கத் தண்ணீர் கொடு” என்று இயேசு கேட்கிறார். தன்னை அறிந்துகொள்ளவும், அன்பு செய்யப்படவுமான அழைப்பு அது. அன்பு செய்யப்படவும், அறிந்துகொள்ளப்படவும் நம்மை அனுமதிக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்து என்ற உயிருள்ள தண்ணீர் உள்ள கிணற்றுக்கு வருமாறு நாம் அழைக்கப்படுகிறோம். இந்த கிணற்றில் இயேசு கிறிஸ்து நம் கடந்த காலத்திலிருந்து நம்மை கழுவுகிறார். புதிய வாழ்வும் புதிய வாய்ப்புகளும் உருவாகின்றன. நம்மை எப்போதும் தாகத்திலேயே வைத்திருக்கும் வாழ்க்கை முறைகள் மற்றும் பழக்கவழக்கங்களிலிருந்து விடுபட உயிருள்ள தண்ணீர் உதவுகிறது. இயேசு கிறிஸ்து என்னும் உயிருள்ள தண்ணீர் சமாரியப்பெண்ணில் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கிறது. **அது ஒரு சில நிமிடங்களாக இருந்தாலும், ஒவ்வொரு நாளும், குடும்பமாக இறைவேண்டல் செய்யுங்கள், உயிருள்ள நீரூற்றான இயேசுவின் அன்பு நம் ஒருவரையொருவர் நிரப்பும்படியும், அவரில் மட்டுமே நாம் தாகம் கொண்டிருக்கவும் மன்றாடுவோம்.**

மனிதனும் ஒரு பயணி தான். வாழ்க்கை என்னும் பாலைவனத்தைக் கடந்து, புதிய பொங்கியெழும் உயிருள்ள தண்ணீரில் தாகம் கொண்டு ஒளி, அன்பு, அழகு மற்றும் அமைதிக்கான ஆழ்ந்த ஆர்வத்தை தணிக்கும் திறன் கொண்டவர். ( திருத்தந்தை பிரான்சிஸ் ம்# 8, 2013)

அது ஒரு சில நிமிடங்களாக இருந்தாலும், ஒவ்வொரு நாளும், குடும்பமாக இறைவேண்டல் செய்யுங்கள்

## இன்றைய வாசகங்கள்:

முதல் வாசகம்:
விடுதலைப் பயணம் 17: 3-7
“மக்கள் குடிக்க தண்ணீர்”

திருப்பாடல்: 95
“அவரே, நம் கடவுள்”

இரண்டாம் வாசகம்:
உரோமையர் 5: 1-2, 5-8
“கிறிஸ்து நமக்காக இறந்தார்”

நற்செய்தி:
யோவான் 4: 5-42
“அத்தண்ணீரை எனக்குக் கொடும்”



*Published by:*
Peninsular Malaysia Pastoral Team

*Email:* api@archkl.org

INTERNAL CIRCULATION ONLY
BUL 11/2023